[2005 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பக்கத்து ஊருக்குக் கொண்டு போக வேண்டியதுதானே? திரு. லா. சந்தானம். (குறுக்கீடு)

**திரு. எஸ். மாணிக்கராஜ்:** நன்றி.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கால்நடை மருத்துவமனைகள் தொடங்குகின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? அப்படியென்றால் எத்தனை கால்நடை மருத்துவமனைகள், தமிழகத்திலே இந்த ஆண்டு தொடங்கவிருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையிலே பதில் சொல்வார்கள்.

வினா எண் 253, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**253—**

**வனநில ஆக்கிரமிப்பு**

***51099—திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் வனங்களுக்கு அருகில் உள்ள பட்டா உரிமையாளர்கள் மற்றும் எஸ்டேட் உரிமையாளர்களால் வன நில ஆக்கிரமிப்பு செய்யப்படுவதை தடுப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பட்டா உரிமையாளர்கள் மற்றும் எஸ்டேட் உரிமையாளர்கள் வன நிலங்களை ஆக்கிரமிப்பு செய்யவில்லை. அதனால் ஆக்கிரமிப்பை அகற்றும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்காடு தொகுதி, ஏற்காடு மலையில், பிரசித்திபெற்ற சேர்வராயன் கோவில் உள்ளது. இந்தக் கோவிலில் தரிசனம்

செய்வதற்காக—சுற்றுலாத் தலமாக இருப்பதால்—பொதுமக்கள் அதிகமாக வருகிறார்கள். அங்கு சாலையோரங்களிலே, கோவில் அருகிலே வன நிலங்களை ஒரு தனியார் நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்துள்ளது. பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல், இந்தக் கோவிலுக்கு அருகிலுள்ள தனியார் ஆக்கிரமித்துள்ள நிலங்கள் குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவிலுக்கு அருகிலுள்ள வன நிலங்களை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வனத் துறைக்கு எந்தத் தகவலும் இல்லை. அப்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா.தி. இளையகண்ணு.

**திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தனியார் நிறுவனம் கனிம மண்ணை வெட்டி எடுத்துச் செல்கிறது. இந்தத் தனியார் நிறுவனம் மால்கோ என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது பொதுமக்களுக்கு இடையூறாகவும், வருகின்ற பக்தர்களுக்கு சிரமமாகவும் உள்ளதால், வாகனங்களை நடு வழியில் நிறுத்திவிட்டு, சாலை ஓரங்களிலே இருக்கின்ற மண்ணைக்கூட எடுக்கிறார்கள். இது அதிகாரிகளுக்குத் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுமக்கள் கொடுக்கின்ற புகார்கள்மீது அதிகாரிகள் செம்மையாக நடவடிக்கை எடுக்காத காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 254, திரு. ஆ.கு.சீ. அன்பழகன், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.